சிரவைக் கௌமார சபை வெளியீடு

ஓம்
குருவே துணை

உடையாம்பாளையம்

ஸ்ரீ மாரியம்மன் பாமாலை

மற்றும் பல
தெய்வத் துதிகள்

ஆசிரியர்
சிரவணபுரம் கௌமார மடாலயம்
இரண்டாவது சன்னிதானங்கள்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

பதிப்பாளர்கள்
திருப்பணிக் குழுவினர்
உடையாம்பாளையம்

ஆங்கிரஸ ஆவணி
1992

சிரவைக் கௌமார சபை வெளியீடு 150

ஓம்
குருவே துணை

உடையாம்பாளையம்

ஸ்ரீ மாரியம்மன் பாமாலை

மற்றும் பல
தெய்வத் துதிகள்

ஆசிரியர்
சிரவணபுரம் கௌமார மடாலயம்
இரண்டாவது சன்னிதானங்கள்
ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள்

பதிப்பாளர்கள்
திருப்பணிக் குழுவினர்
உடையாம்பாளையம்

ஆங்கிரஸ ஆவணி
1992

குருவே துணை

முகவுரை

உடையாம்பாளையம் மாரியம்மன் பாமாலை என்னும் இந் நூல் சின்னவேடம்பட்டி மஜரா உடையான் பாளையத்தில் கோயில் கொண்டு விளங்குகின்ற பல தெய்வங்களையும் துதித்துப் புனைந்த பாமாலையாகும்.

சென்ற சுபானு ஆண்டு சித்திரை மாதத்தில் (1943) பல அன்பர்கள் மற்றும் ஊர் பொதுமக்களின் பேருதவியால், புதிய சிற்ப முதலியன அமைத்துச் சிறப்பாகக் கும்பாபிடேகம் நடை பெற்றது. அதுசமயம் சிரவை கௌமார மடாலயத்தின் இரண்டாவது குருமகா சன்னிதானமாக எழுந்தருளியிருந்த, ஸ்ரீமத் கந்தசாமி சுவாமிகள் கும்பாபிஷேகத்திற்குத் தலைமை ஏற்று மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்தனர், இந்த அரியதுதி நூலையும் பாடி அரங்கேற்றியருளினர்.

சுமார் 50 ஆண்டுகட்குப்பின் மேற்படி ஆலயம் மிகவும் பழைமை யாகிவிட்டிருந்தபடியால் விமானம் புதுக்கி வண்ணம் வைத்து முன்பக்கம் குறிஞ்சி, முன்மண்டபம், வாகனமண்டபம் அமைத்து மேலும் பல திருப்பணிகளையும் சின்னவேடம்பட்டி சுப்பநாயக்கன் புதூர், உடையாம்பாளையம் ஆகிய மூன்று ஊர்களிலும் உள்ள பொது மக்கள் மற்றும் அன்பர்களது பெருமுயற்சியாலும், உதவி யாலும் நிகழும் ஆங்கீரஸ ஆண்டு ஆவணி மீ 25-ம் நாள் (10-9-1992) அன்று சிரவை கௌமார மடாலயம் மூன்றாவது குருமகா சன்னிதானமாக எழுந்தருளியிருக்கும் தவத்திரு சுந்தர சுவாமிகள் தலைமையில் கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இந்த நன்னாளில் உடையாம்பாளையம் மாரியம்மன் பாமாலை என்ற பெயரிய இந்தநூல் இரண்டாவது பதிப்பாக வெளியிடப் பெற்றது.

உ

குருவே துணை

விநாயகர் பதிகம்

காப்பு வெண்பா

மூலப் பொருளாகி முன்னுடையான் பாளையம்வாழ்
கோலக் கணபதிப்பேர்க் குஞ்சரத்தைச் சீலக்
செழுந்தமிழ்ப்பா வால்துத் தியம்புரிய, யாரும்
தொழும்சித்தி புத்தி துணை.

அறுசீர் விருத்தங்கள்

1. கொம்பமையும் துதிக்கைமுக மும்,கருணை
பொழிவிழியும் குன்றாத் 1 தேறல்
2வம்பமையும் கொன்றைமலர்த் தொடைப்புயமும்
3 கோகனக மலர்ப்பொற் றாளும்
4 அம்பமையும் விழிச்சித்தி புத்திமிவர்
மத்திஉற, 5ஆகு வின்மேல்
பம்பமைவான் காட்சிநல்காய் உடையான்பா
ளையம் கொள்கண பதிப்பெம் மானே

1. தேறல்—தேன் 2. வம்பமையும்—வாசனை
3. கோகனகமலர்—தாமரை மலர்
4. அம்பையும்—பாணம் போன்ற கூரிய
5. ஆகு—பெருச்சாளி வாகனம்

2. கைமேலாம் பலன்அளிக்கும் உன்பூசை
என்றும்மனக் களிப்பில் செய்து
மெய்மேலாம் வரத்தருவாய் எனநம்பி
நிற்பேனை, வீணே மாயப்
பொய்மேலாம் புல்லர்புரி வாதனையால்
புழுங்கவிடப் போமோ 1துத்திப்
பைமேலாம் பணியுடையாய், உடையான்பா
ளையமகொள்கண பதிப்பெம் மானே

1. துத்திப்பை—பாம்பின் படம்

3. ஓங்காரத் துட்பொருளாம் உன்அடித்தொண்
டாற்றும்எனை உலக் மீதில்
ஆங்காரத் துட்டர்களாம் 1ஐம்புலவே
டுவர்ஆணைக் கஞ்சிவாடும்
தீங்காரக் காண்பதுநின் பேரருள்மாட்
சிமைகடுக்கும் செயலன் றின்பப்
பாங்காரப் புரிந்தருள்வாய் உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானே

1. ஐம்புலவேடுவர்—மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்
ஐந்து புலன்கள்

4. தேட்டமுறும் உன்னதருள் 1சகுணஉரு
இடையறச்சிந் தித்தெந் நாளும்
நாட்டமுறும் புனல்உடம்பை நனைப்ப2வரை
அற்றவிர்மெஞ் ஞானா னந்த
வீட்டமைஉன் சீர்த்திஅருட் கடல்பருகிப்
பொழியும்இன்ப விளக்கம் ஈந்தாள்
பாட்டளிப்பூம் பொங்கர்அணி உடையான்பா
ளையங்கொள்கண பதிப்பெம் மானே

1 சகுண உரு-கண்ணால் காணப்படும் திருமேனி;
2 வரை அற்று-எல்லையில்லாமல்

5. 1கடப்பணிக்குங் குமவரையாம் குமரன்அணிப்
புயத்துணைமேல், கான வள்ளி
குடப்பணிக்குங் குமக்கொங்கைக் 4கொங்கைஅமைத்
திட,2 இபமாம் கோவே! மாயை
தொடப்,3 பணிவாய்ப் படும்தேரை போற்பதைக்கும்
எனை,அருட்சிற் சுகத்தூ டொன்று
படப்பணிப்பாய், விட்டுவிடேல், உடையான்பா
ளையங்கொள்கண பதிப்பெம் மானே

1 கடப்பு அணி-கடம்பு மலர் மாலையை அணிகின்ற;
2 இபம்-யானை (வள்ளிநாயகி முருகக்கடவுளின் திருத்
தோள்களைத் தழுவும்படி எதிரில் தோன்றிய யானைமுகனே)
3 பணி-பாம்பு; 4 கொங்கு-அழகு (இளமை)

6. ஆக்கிஅளித் தழித்திடும்முத் தொழிற்கருத்தர்
தம்தவத்தால், அவர்கண் முன்பு
தேக்கியபே ரருள்விருந்தாம் தெரிசனம்தந்,
தவர்கள்உளம் தெளியும் வண்ணம்
நோக்கியகட் கடைச்சிறப்பில் சிறிதெனைப்பார்த்
திடில்அந்த நொடியில் எல்லாப்
பாக்கியமும் எய்திடுப்காண் உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானே

7. பிட்டவல்,பா யசம்,வடை,மோ தகம்,தேங்காய்
பழவகைகள் பெருகும் அன்பில்
இட்ட,லர்பச் சறுகுநின்பேர் ஓதிஇரு
தாள்மிசைபெய் திடுவார்க் கெல்லாம்,
கட்டழகு பெற்றவிர்கற் பரிவையர்,சற்
புத்திரச்சீர், கவின்ற மன்னர்
பட்டமும்,வா னமும்எளிதே; உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானே

8. திரையறு[1] சா கரமேபோன் றுன்னடியார்
சிந்தைமிசை தெவிட்டா தென்றும்
கரையறுபே ரின்பஉற்றுக் களித்தனர்;யான்
இடியொலிக்[2] கட் செவியே போலப்,
புரையறுதுற் குணப்பகையால் பதைபதைத்துத்
திடுக்கம்மிகப் புலம்பா நின்றேன்;
பரைஅருட்பா லகஅருளாய் உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானே

1 சாகரம்-சமுத்திரம்; 2 கட்செவி-பாம்பு

9. விண்ணவர்கள் போற்றுபுகழ் மெய்கண்ட
நாதனுள்ளம் விளக்கம் மேவப்,
பண்ணமைவெண் பாவினம்எண் பத்துநான்
கிசைத்தருளும் பரனே! மாயைப்
புண்ணமைந்தோர் புகலற்றுப் புலம்படியேன்
தன்னதுகட் புலம்நேர்ந் [1] தாளாப்
பண்ணஇசைந் தருள்அபயம் உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம மானே

ஆளாப் பண்ண-அடிமையாகக் கொள்ள

10. அடுத்தடுத்துன் பால்,அடியேன் சிற்றறிவும்
சிறுதொழிலும் அமைவார் தம்பால்
எடுத்தெடுத்துப் புகன்றிடல்போல், முயன்றிடுதற்
கஞ்சுகின்றேன்; இரங்கி நின்கை
கொடுத்தெடுத்,தௌ வையைப்போலக், கைலாய
கிரிமுடிக்கண் கூடிம் வண்ணம்
1 படித்,தெடுத்த துதிக்கைஉளாய்; உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானே

படுத்து-செய்தருள்க

11. முற்பதிஎண் றாரணம்,ஆ கமங்கள்எலாம்
ஏத்தும்முழு முதலாய்த் 1 தற்காம்
பற்பதிகட் குரிமைமலி உடையான்பா
ளையம்கொள்கண பதிப்பெம் மானைக்
கற்பதிகக் கௌமார் சிரவைமடா
லயக்கந்த சாமி ஏத்தும்
சொற்பதிகம் துதிப்பார்க்கு நற்பதிவாழ்
வாற்றுபெரும் துணையாம் மெய்யே

1 பல்பதிகள் தற்த ஆம் உரிமை மலி உடையான்பாளையம்

விநாயகர் பதிகம் முற்றிற்று.

தெய்வமே துணை

உ

குருவே துணை

2. மாரியம்மை மாலை

காப்பு வெண்பா

கூரியவேற் கட்கருணை கொண்டுடையான் பாளையம்
வாழ்
மாரியம்மைக் கோர்மாலை வாழ்த்தணியச் - சீரியர்தம்
உள்ளத் திருக்கோயில் ஓங்குவிக்கி னேசன்அருள்
வெள்ளப் பதம்துணையா மே.

நூல்

எழுசீர் ஆசிரிய விருத்தங்கள்

1. மஞ்சுறழ் சுகந்த1குந்தள பார
மதிமுக மும்,பெரும் கருணை
மிஞ்சுபுன் னகைச்செவ் வாயும்,வை வேலை
2வேலையை நிகர்விழித் துணையும்
3பஞ்சுறு பதமுப் பட்டுடை இடையும்
பணிக்கரங் களும்,பொலிந் திலகாய்,
விஞ்சுசீர் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

1 குந்தளம்-கூந்தல்; *2* வேலை சமுத்திரம்;
3 பஞ்சுஇறு-பஞ்சினைப் போன்று மென்மையான

2. சிலம்உற் றிடுதாய் நின்அருள் கருதிச்
சிந்தையின் புற்றிடும் என்னைப்
பாலன்என் றுள்ளத் தெண்ணுகி 1லாதப்
பாலன்என் றேபுறக் கணிக்கின்
ஞாலம்,விண் ணகம்,பா தாளமாம் இடத்தும்
நாடும்மற் றொருகதி உளதோ?
மேலருள் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

அப்பாலன்-தனக்கு அப்பாற்பட்டவன்

3. பாவபுண் ணியங்கள் இவைஎனத் தம்முள்
பகுத்தறி யாதரர் உறவால்,
நோவமைந் தயரும் ஏழையேன் இருகண்
நோக்கிட, முன்எழுந் தருளி,
ஆவல்முற் றளித்திவ் வுலகுணர் விளையாட்
டாற்றி,உட் களிப்புறப் புரிவாய்;
மேவணி உடையான் பாளையக் கோயில்
மிளிரிசை மாரியம் பிகையே

4. வானிசை அமரர் தாம்பெற விரும்பும்
மகிமைமா னிடப்பிறப் பமைந்தும்,
கானிசை பறவை விலங்கெனப் பிணத்தூன்
கடித்தனர் குடித்தறி வழியார்
தானிசை சீவ கருணைஆ தியசீர்
தழைத்துவாழ்ந் திடஅருள் புரிவாய்;
1வேனிசை உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

வேன்-வியன்-சிறப்பு;

5. பத்திதந் தருள்வாய்; ஞானவித் தகர்மெய்ப்
பணிவிடை துணிவுடன் புரியும்
புத்திதந் தருள்வாய்; உயர்ந்தசிட் டர்களைப்
புரந்து,துட் டரைத்தெறும் வாக்குச்
சித்திதந் தருள்வாய்; எனத்துதிப் பேற்குத்
திருவருள் வழங்கிலை என்னே?
வித்தியல் உடையான் பாளையக் கோயில்
மிளிரிசை மாரியம் பிகையே.

6 வண்டுமு திடுபூங் கொம்பனார் ஏவல்
வழிஅவா இழிபழி வழிநின்
றுண்டுறங் குபுபொன் ஈட்டிமாய்ந் திடுதற்
கொருப்படு வாரைநீத், துன்மெய்த்
தொண்டுடை யவர்கொண் டுவப்புறும் அழியாச்
சுகம்பொருத் திடுதினம் எதுவே?
விண்டருள்; உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

7. வழிபடற் பொருட்டாய், உத்தபர் அன்பில்
வகுத்தஆ லயத்திடை, கொடியோர்
பழிபடற் பொருட்டால், ஆடுகோ ழிகளைப்
பலியிடு வார், அவர் வினைகள்
அழிபடப் பிணியால், வறுமையால் வாட்டி
அருநர கமிழ்ந்திடா தொழிய
1விழிபடுத் துடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

விழிபடுத்து-திருக்கண் பார்வை அருளிக் காப்பாயாக

8. கடைபடு கலியின் செயலெனத், தமது
கருத்துவந் தைம்பெரும் பாவ
நடைபடும் படி, மற் றவர்க்குப தேசம்
நவிலும்வன் பாவிகள் மண்டை,
படைபடும் பண்பில் உடைபடுத் திடுசொற்
பலிதம்ஈந் தருளுதி மாட்சி
மிடைபடும் உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

9. பற்பல உயிர்க்கும் அன்னை, தெய் வமுமாம்
பண்பமைந் துற்றஉன் சமுக
முற், பல பலவாம் மங்களப் பொருள்கள்
முற்றுபே ருவப்பினில் படைத்து,
நற்பலன் பொருந்தும் பூசைசெய் வார், உள்
நாடிய பயன்முழு தளிப்பாய்;
1விற்பயில் உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே.

வில்-அருள் ஒளி

10. மதித்திடும் எமது மனைவிசேய் வாழ்வு
வளப்பொலி பாக்கியம் பொருந்த
விதித்திடு கென்ன வேண்டுவார், பலிசெய்
வேதனை காணில்உன் உள்ளம்
கொதித்திடும் எனைத் திரைகொடு மறைப்பார்
கொள்கைஎன் னே! அவர் குலைய
மிதித்துழக் குடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

11. கோரிக்கை தெய்வத் தினுக்குத வுவதாக்
கூறி, ஆ டெ, ருமைகோ ழிகளைச்
1சோரிக்கை வாளால் கொன்று, யர் கோயில்
2சூரை நா றிடச்செய், தில் விடம்போய்
வாரிக்கை நிறையும் படிஇடு காடாம்
வயிற்றடைப் பார்ப்பிணம் புரிவாய்
வேரிக்கை உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

சோரி-இரத்தம்; சூரை-குருதி நாற்றம்

12. வானகத் தினர்க்கும், மண்ணகத் தினர்க்கும்,
மத்தியில் அமைதரும், இசைதோய்
1கானகத் துணர்பூ சனை, அனை வருக்கும்
கலந்தபே ருரித்தெனத் தெரிந்தும்,
நானகத் திசைபூ சனைசெயேன், உற்ற
நரசென்மம் எங்ஙன்மேல் அந்தோ
மேனக உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே.

கானகத்துணர்-மலர் வனங்களில் பூக்கும் மலர்கள்

13. 1தெரியலாய் மலரைத் தொடுத்துன்மேல் சூட்டிச்
சேவடி மலர்அருச் சிக்கில்,
2தெரியலாம் மனிதப் பிறப்பின்மேன் மையதாம்
சிறப்பினைப்; புவியில்எண் சித்தும்
புரியலாம்; உயிர்கட் கிகபர சுகங்கள்
பொருத்தலாம்; ஒப்பில்மெஞ் ஞானம்
விரியலாம்; உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே.

1 தெரியல்-மாலை; 2 தெரியலாம்-தெரிந்துகொள்ளலாம்;

14\. [1]பரசுகந் திட்ட கையுடன், தேவர்
[2]பரசுகந், தப்பத முனிவோர்
[3]பரசுகந் தங்க விழிஅருள் பொழியும்
பரசுரா மன்தனை அளித்த
வரசுக அமிழ்த மயப்பெருந் தாய்;நின்
மடைஉடைத் தெழும்விழி அருட்சீர்
[4]விரசுவாய்; உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

1\. பரசுஉகந்திட்ட — ஆயுதம் விரும்பிப் பிடித்துள்ள
2\. பரசுஉகந்து — துதித்தலை ஏற்று
3\. பரசுகம் — வீட்டின்பம் 4. விரசுவாய் — மேவச்செய்வாய்

15\. ஒன்றொரு நலமும் காண்கிலேன், மாய
உடல்புனைந் துறங்கிஉண் டவமே
நின்றொரு தமியேன் நடையுடைப் பிணமாய்
நிலச்சுமை யாய்த்தளர்ந் தனன்,நீ,
இன்றொரு புதுமை நலம்பெற, எளியேற்
கிரங்கிவந் திந்து,வெம் பவநோய்
வென்[1]றொரு, வுடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

1 ஒருவு—நீக்கியருள்க;

16\. கிராமதே வதைப்பேர் பெற்றமை நீ.நின்
கீழ்க்குடி யாகினர் தம்மைப்
பராமுக மின்றி, நல்லுணர் வுடன்செள
பாக்கிய இகபர சுகங்கள்
[1]தராதர வகையில் கொடுத்,தெலா ரையும்மெய்ச்
சமரச சுத்தசன் மார்க்கம்
விராவவை; உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

1 தருஆதர—கொடுக்கின்ற ஆதரவு;

17\. [1]சரிகைதோய் நினைக்குச் சரிகைவத் திரம்மேல்
சாத்தி,மா லிகைஅலங் காரம்
புரிகைதோய் நைமித் திகவிழாக் கண்டு
போற்றுதம் பதிகள்,மேல் பிறப்பில்,
சுரிகைஏந் தியகைத் துவாரபா லகர்கள்
சுலாம்மனை முன்றிலர் அன்றோ?
விரிகைதோய் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

1\. சரி — ஒரு ஆபரணம்

18. தாயென உன்னைப் பற்பல்கால் உரித்தில்
சாற்றியும் போற்றியும், உன்பின்
நாயெனத் திரிந்திங் கெய்த்திடும் எனைக்,கண்
நாடிநீ ஓர்தரம். 'எனதோர்
சே'யென உனது திருமுலைப் பால்,'அஞ்
சேல்'என அளிக்குதி திருத்தோள்
1வேலயன உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

1 வேய்என—மூங்கில் போன்று

19. ஆவலால் துதித்துன் பால்இரந் திடுகை,
அளகை,பொன் னுலகம்,மண் ணுலகம்,
காவலாற் றிடும்ஓர் மாட்சிஅன் று;லகக்
கண்உயிர்க் குலத்தவா அளிக்கும்
ஏவலாற் றிடவே விரும்பினேன்; இதுவும்
ஈந்திடா திருப்புதென் இசைப்பாய்?
மேவலாற் றுடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

20. சூடிட் லுற்ற மலர்த்தொடை, செம்பொன்,
சுடர்ப்பணி, துணிகள்போல் முறையே
வாடிட லற்ற, தேய்ந்திட லற்ற,
வாரையாய்க் கிழிந்தழுக் கெண்ணெய்
கூடிட லற்ற, என்துதி மாலை,
கொண்டுளம் உவந்து,பே ரின்ப
வீடிட உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

21. மூவகை மலங்கள், மூவகை இச்சை,
மூவகை உலகினும் சுழற்றப்,
பாவமும், பழியும் சுமந்துநொந் தயர்ந்த
பரிசுபோ தாதுகொல்? பகராய்!
சிவகா ருணியம், ஈசுர பத்தி,
சிறப்புறு துறவு,மெஞ் ஞானம்
மேவநல் குடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

22. பூசனை, துதி,அர்ச் சனை,வழி பாடு
புரிகுநர் தம்உளப் பத்தி
வாசனை அமையக் கொள்வதல் லாதுள்
வாஞ்சை,மற் றவையின்பால் உளதோ?
மாசனைத் தையும்தொண் டினர்க்கொழி, திம்மை
மறுமையில் பொலிநலம் முழுதும்
1வீசனை; உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

1 வீசு அனை—அருளுகின்ற அன்னை

23. விடியுமுன் எழுந்து, மணப்புனல் ஆடி,
விதவிதத் துணிபணி அணிந்து,
கடிமலர் முடித்து, முடிவிளக் கெடுத்துக்,
கனிந்துனைப் போற்றுகன் னியர்க்குப்
படிவிளக் கிடுமெய்ப் பாலர்க்கும், சகல
பலிசுபாக் கியங்களும் வழங்கி,
1மிடியொழி; உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

1 மிடி—வறுமை

24. தெய்வம்ஏ து.ற்ற தலங்கள்ஏ து,யர்ந்த
தீர்த்தங்கள் ஏதி,வை அனைத்தும்
பொய்வழக் கென்று, கள்அரக் குடனே
புலால்அருந் துபுகளித் துழல்வார்
நைவமை குலம்மூ வேழையும் தொலைக்கும்
நல்வரம் எனக்களித் துலகில்
மெய்வளர் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

25. ஆலயம் கட்டல், சத்திரம், மடங்கள்
அமைத்தன்ன தானம்ஈந் திடுதல்,
பாலகர்க் குண்மைக் கல்விபோ தித்தல்,
பசுக்குலம் காத்திடல், மகிமை
சாலருட் குருசங் கமலிங்க பூசை
தரணியில் பொலியுமா றருளி,
மேலமை உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே.

26. தோதகப் பாவச் சிந்தையும், மாயைச்
சூழ்ச்சி, ஐம் பாதகம் பெருக்கும்
போதக வாக்கும், இஞ்சையும், கொலையும்,
புலையும்மிக் குலப்பினில புரியும்
காதகப் பழக்க வழக்கமும் தவிர்சற்
கதியில், மா னிடர்களை நடத்தாய்
மேதக வுடையான் பாளையக் கோயில்
மிளிரிசை மாரியம் பிகையே.

27. சுருப்பிசை முரலும் இதழ்அவிழ் அலங்கல்
சுகந்தகுந் தளத்துடன், 1முறுவல்
அரும்பிசை இதழ்ப்பூ ரணமதி முகத்தோ
டவிர்ந்தென தகவிருள் அறுப்பாய்;
கரும்பிசை சின்ன வேடன்பட் டியும், சீர்
கமழ்கப்ப நாய்க்கன்பு தூரும்
விரும்பிசை உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

1 முறுவல் அரும்புஇசை இதழ்—புன்னகை புரிகின்ற அழகிய உதடுகள்

28. 1பாத்திரம் பெறுசற் பாத்திரம் என, உன்
பாற்சுவைப் பாலமிழ் தனைய
தோத்திரம் கொடுவின் ணப்பம்செய் திட்ட
தொகைஎலாம், வகைபெறக், கருணை
நேத்திரம் கொண்டென் நெஞ்செலாம் குளிர
நீவிரைந் துதவுவாய் சரணம்;
மீத்திர உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே

1 பாத்திரம்—பாடல் புனைகின்ற ஆற்றல்

29. ஈண்டிய கலியில் பொருந்திய இடையூ
றெவைக்கும்அஞ் சாது, நின் அருட்சீர்
தூண்டிய துணையால், கற்பணி சிற்பத்
துறைநலம் நிறைவுறப் புரிந்து,
கூண்டியல் அன்பில், உனைப்பிர திட்டை
குயிற்றுமுப் பதியர், நன் கோங்க
வேண்டினன்; உடையான் பாளையக் கோயில்
மிளிர் இசை மாரியம் பிகையே.

30. புத்தியற் கோயில் இயற்றி,நின் வடிவம்
பொலிவுறப் பிரதிட்டை புரிந்தே
நித்திய நைமித் திகம்செய்யுப் பதியோர்,
நேர்ந்திடும் மற்றையர் தமக்கும்
எத்திய நலங்கள் அனைத்தும்ஈந் தென்றும்
இன்றுபோன் றிலங்கும்மாண் பிசைப்பாய்;
மெத்தியல் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையே

நூற்பயன்

வரமலி கொங்கு நாட்டினுக் கழுகு
வயங்கணி அவயவம் போன்று
விரவுசீர் உடையான் பாளையக் கோயில்
மிளிர்இசை மாரியம் பிகையைச்
சிரவைதோய் கௌமா ரன்,கந்த சாமிச்
சேய்அகத் தன்புரிமை மையினால்
பரவிய மாலை துதிப்பவர்க் கிருமைப்
பயனுப்ஈந் திடுதல்சத் தியமே

மாரியம்மை மாலை முற்றிற்று
தெய்வமே துணை

3 வரதராஜப் பெருமாள் பஞ்சகம்

காப்பு வெண்பா

பற்றும் புகழ்உடையான் பாளையத்தில் அன்படியார்
நற்றுணையா கும்வரத ராஜன்அருள் முற்றுதவப்
பஞ்சகப்பா ஓதும் பதிராமா னந்தகுரு
நெஞ்சகப்பால் ஓங்கிஎன்றும் நின்று

அறுசீர் விருத்தங்கள்

மின்உந் திய1சூல் மேகம்என
விளங்கும் மேனி மீதில்அருள்
பொன்உந் தியபீ தாம்பரமும்
பூதே வியுச்சீ தேவியும்தோய்
2கொன்னுந் தியநின் சேவைவிழி
குளிரப் பரிவிற் கொடுத்தருள்வாய்
மன்னும் உடையான் பாளையம்வாழ்
வரத ராஜப் பெருமாளே

1 சூல்மேகம்—கார்மேகம்; கொன்—அழகு;

2. கண்ணன் ஆகும் நீஎன்உளக்
  கண்ணன் ஆகி, மெஞ்ஞான
விண்ணம் ஆகும் வைகுந்த
  வீட்டில் புகுத்து வாய்எனும்என்
எண்ணம் பலிதம் உறப்புரிதல்
  எந்நாள், ஓதாய்? காயாம்பூ
வண்ண உடையான் பாளையம்வாழ்
  வரத ராஜப் பெருமாளே.

3. சேண்பா தாளம், புவியிடத்தில்
  சென்றும், இருந்தும், இறந்தும்மிக
வீண்பா டுடையேன்; அவைமுழுதும்
  விழுங்கி அளந்த வாய்அடிகட்
காண்பான் அலந்தேன், எனதுள்ளக்
  காதல் பொரலியக் கடைக்கணித்தாள்
மாண்பார் உடையான் பாளையம்வாழ்
  வரத ராஜப் பெருமாளே.

4. பகைதோய் அரக்கர் தங்களையும்
  படையால் சாடிப், பேரின்ப
மிகைதோய் பரம பதத்தில்உற
  விடுக்கும் முதல்வா; பாகவதர்
தொகைதோய் குணம்கொண் டுனதருட்சீர்
  துதிக்க விழைந்தேன்; சுகிர்தம்உறும்
வகைதோய் உடையான் பாளையம்வாழ்
  வரத ராஜப் பெருமாளே.

5. 1கருவாய் மருவப் புரிமாயைக்
  காட்டைக் கடந்து, தேன்ஊறும்
திருவாய் மொழிதோய் சடகோபன்
  சித்தம் புகுந்து, பிரியாத
பெருவாய் மைச்சீர் வைகுந்தம்
  பெற்றுக் குளிரப் புரிந்திடமுன்
வருவாய்; உடையான் பாளையம்வாழ்
  வரத ராஜப் பெருமாளே.

1 கருவாய் மருவ—பிறப்பினை அடைய

6. சாட்சி எனவே உற்றசரா
சரங்கள் முழுதும் கலந்துநின்று
மாட்சி உடையான் பாளையம்வாழ்
வரத ராஜப் பெருமாளைக்,
காட்சி தருவான் வேண்டிஅன்பில்
கந்தசாமி புகல்பதிகம்,
ஆட்சி பொலிநா வுடையார்பால்
அடையும் சுகம்தீ தகன்றறுமே

வரதராஜப் பெருமாள் பஞ்சகம் முற்றிற்று.

தெய்வமே துணை.

4 அப்பிச்சியார் துதி

அறுசீர் விருத்தம்

மழைஅனைய கொடைச்சிறப்பும், பொய்புகலா
வாக்கும்.மிக வளர்ந்து, செல்வம்
தழையும்மனை வாழ்க்கையும்,சற் புத்திரப்பே
றும்,தெய்வம் தனையே நாடிக்
குழையும்அகப் பத்தியும்,சற் புத்தியும்,விற்
பத்தியும்,மேல் குன்றா தோங்கும்
பிழையறுவாழ் வளித்தருள்வாய், சரண்,உடையான்
பாளையத்தப் பிச்சி யாரே.

தெய்வமே துணை

தேவி சகாயம்

5 வஞ்சியம்மன் பஞ்சகம்

வெண்டளைக் கலிப்பாக்கள்

1 கந்தமலர் 1ஓதிக் கவினார் திருமுகமும்
2சந்த மணிமுறுவல் சார்புன் னகைவாயும்
சொந்தக் கருணையுடன் தோய்உடையான் பாளையத்தில்
வந்தருள வேண்டும்அம்மா வஞ்சிப் பெயர்க்கொடியே.

1 ஓதி—கூந்தல்; சந்தம்— அழகு;

2. இகத்தி னிடை துயர்ஒன் றெய்தா தருளால்
அகத்தில் குடிகொண் டமைந்தே, மறுமைச்
சுகத்துணையும் சேரத் துணையாவாய்; மேலாம்
மகத்துவம்மிக் கேய்ந்தபுகழ் வஞ்சிப் பெயர்க்கொடியே

3. 1கொங்கலர்பூ மாலைஅணி கொண்ட நவமணிதோய்
தொங்கல்அவிர் பட்டாடை சூட்டி, மகிழ்வுடனே
பொங்கல் அமைப்பார்தம் புந்திஅவா உற்றபல
மங்களமும் தந்தருளும் வஞ்சிப் பெயர்க்கொடியே

1 கொங்கலர்—புதிதாக மலர்ந்த;

4. சேயில் விளங்கும்இசைச் சேரலன்தன் கோத்திரத்தார்
தாயில் விளங்கித் தனிஉடையான் பாளையம்தோய்
கோயில் விளங்கக் குடிவிளங்கச் செய்துகதி
வாயில் விளங்கஅருள் வஞ்சிப் பெயர்க்கொடியே

5. தேசம் பொலிந்தழியாச் சீர்த்தி யுடன்அருட்சீர்
நேசம் பொலியஎன்றன் நெஞ்சகத்தில் நின்றெதிர்வார்
பாசம் பொலிவினையும் 1பாற்றுடையான் பாளையத்தில்
வாசம் பொலிதேவாம் வஞ்சிப் பெயர்க்கொடியே

1 பாற்று—நீக்கியருள்;

6. கொல்லா விரதம்கைக் கொண்டவர்உள் இச்சைதரும்
வல்லாளா கும்கருணை வஞ்சிப் பெயர்க்கொடியைச்
செல்லார் பொழில்சிரவைச் சேய்துதித்த பாஇசைநா
ஒல்லா தரத்தோர்பால் உற்றகுறை முற்றறுமே.

வஞ்சியம்மன் பஞ்சகம் முற்றிற்று.

வாழி விருத்தம்

பார்வாழி உடையான்பா ளையம்வாழி
கணபதிப்பேர் பதிமெய்த் தேவன்
சீர்வாழி அருள்மாரி யம்மைஅணித்
திருக்கோயில் சிறந்து வாழி
கார்வாழி மெய்வரத ராஜபெரு
மாள்வாழி கலித்து மேக
நீர்வாழி நன்மைகள்முற் றவும்வாழி
வாழிஇன்பம் நிறைந்து வாழி

வாழி விருத்தம் முற்றிற்று
தெய்வமே துணை

